தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௯	மலர்
௩௩	ஏவிளம்பி, மாசி 1958 பிப்ரவரி, மார்ச்சு.	௧௧

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்
முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.

(முற்றொடர்ச்சி துணர் ௩௩. மலர் ௰. பக். 292)

ஏடு ௫. பக்கம்—௨.

இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போய்.........சுடு | காடும் ஆகநிலன் அரையே மூன்று மாக்காணிக்கீழ் முக்காலே......... முந்திரிகைக் கீழ் | நானகு மா நீக்கி நிலன் நூற்றிருபத்து நாலே இரண்டு மாவின் கீழ் முக்காலே இரண்டு மாவினுல் நெல் | லு மூவாயிரத்தெண்ணூற்றுக் கலமும் மீன்பாட்டங் காசு மூன்றும் நல்லம்பர் அளந்தபடி நிலன் நூற்றிருபத் திரண்டரையே நான் மாவரைக் கீழரையே நான்மாவரை முந்திரிகைக்கீழரையே இரண்டு | மாவிலும் குளமும் கரையும் நிலன் மூன்றுமா நீக்கி நிலன் நூற்றிருபத் திரண்டரையே ஒரு | மாவரைக் கீழ் அரையே நான்மாவரை முந்திரிகைக் கீழரையே இரண்டு மாவினுல் நெல்லு எண்ணூ | ற்றுக் கலமும் மீன்பாட்டங் காசு ஒன்றும் திரிபுவன மாதேவி நல்லூர் அளந்தபடி நிலன் தொன்னூறே | ஏழுமா முக்காணிக்கீழரையே மூன்று மாவரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் நில | த்தை ஊடறுத்துப்போன சிங்களாந்தகன்[1] வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போ | ன கொஞ்ஞாப்பூர் வாய்க்காலும் இவ்வூர் சுடு.........நிலன் ஏழுமாமுக்காணிக்கீழ் இ | ருமா வரை முந்திரிகைக் கீழரையேய் இரண்டு மாநீக்கி நிலன் தொண் ணூற்று வேலிக் கீ | ழரையே ஒருமாவரை முந்திரிகைக் கீழ் அரையேய் இரண்டுமாவினுல் நெல்லு இரண்டாயி | ரத்தைஞ் ஞூற்றுக் கலமும் மீன்பாட்டங்காசு ஒன்றும் விச்சூரான சிக்கர் அளந்தபடி நில | ன் எழுபத்தொன்பதே எட்டுமாமுக்காணி முந்திரிகைக் கீழ் ஏழுமா முக்காணிக்கீ | ழ் முக்காலே ஒரு மாவிலும் பிடாரி கோயிலும் திருமுற்றமும் பிடாரியாரிது குளமும்

---

1. சிங்களாந்தகன்—முதல் இராசராசன் சிறப்புப்பெயர்களுள் ஒன்று. சிங்கள நாடாகிய இலங்கையை வென்றடக்கினமைபற்றி இவனுக்கு இப்பெயர் எய்தியது.

கரையும் இவ்வூர்க் குளமும் கரையும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூர்களுக்கு நீர் பாயும் காமபதாகை வாய்க்காலும்| ஆக நிலன் எட்டுமா முந்திரிகைக்கீழ்க் காலே அரைமா முந்திரிகைக் கீழ் அரையேய் இரண்டுமா நீக்கி நி | லன் எழுபத்தொன்பதே முக்காணிக்கீழ் மூன்றுமாவரைக் காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவினுல் நெ | ல்லு ஆயிரத் தொரு நூற்றுக்கலமும் மீன் பாட்டங்காசு ஒன்றும் முஞ்ஞாவல் அளந்தபடி நிலன் எழுபத் | தேழே அறுமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையேய் காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவிலும் | இவ்வூர் குளமும் கரையும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் பிடாரி கோயிலும் | திருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போன காமபதாகை வாய்க்காலுமாக நிலன் மூன்றுமா | முக்காணிக் கீழ் ஒன்பது மாவரை முந்திரிகைக் கீழரையேய் இரண்டுமா நீக்கி நிலன் எழுபத்தே |

ஏடு சு. பக்கம்—க.

மேழ இரண்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரைக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவினுல் நெல்லு நானூ | ற்றுக்கலமும் கூத்தனூர் அளந்தபடி நிலன் எழுபத்தாறே முக்காலே முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா | வரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போன கருவாய்க்காலான | மும்மடிசோழ பேராற்றுலும் | இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன சிங்களாந்தகன் வாய்க்கா | லாலும்[1] இவ்வூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இத்தே | தவர் இறையிலி நந்தவானமும் இத்தேவர் குளமும் கரையும் இவ்வூர் ஐயன் கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் பிடாரி கோயிலும் திருமுற்றமும் இவ் | வூர் கணபதியார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இவரிதே[2] இறையிலி நந்தவானமும் இவ்வூர்ச் சுடுகாடுமாக நிலன் | அரையே அரைமாவின்கீழ் முக்காணிக் கீழ் முக்காலே ஒருமா நீக்கி நிலன் எழுபத் தாறே நான்மாவரை மு | ந்திரிகைக்கீழரையே மாகாணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவினுல் நெல்லு இரண்டாயிரக்கலமும் மீன்பாட்டங் காசு[3] ஒன்றும் அக்கமெட்டும் கமுகன்சேந்தன்குடி அளந்தபடி நிலன் எழுபத்தைஞ்சே முக்காலே மூ | ன்று மாக்காணி அரைக்காணிக்

---

1. இவை முதல் இராசராசன் சிறப்புப்பெயரால் அமைக்கப்பெற்றவை.
2. 'இவரது' என்பதன் மரூஉ.
3. பன்னிரண்டு அக்கம் கொண்டது ஒரு காசு.

கீழ் எழுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ் | வூர் குளமும் கரையும் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போன வெண்ணில் நீரோடு காலும் | இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போய் ஆதநல்லூருச்குப்பாயும் வாய்க் காலுமாக நிலன் ஒன் | றே எழுமா வரையரைக்காணிக் கீழ் எட்டுமா நீக்கி நிலன் எழுபத்து நாலரையே அரைமாவரை | க் காணி முந்திரிகைக்கீழ் முக்காலே நான்குமாவரைக்காணி முந் திரிகைக் கீழ் நான்கு மாவினுல் நெல் | லு இரண்டாயிரத்தைஞ் ஞூற்றுக் கலமும் மீன்பாட்டங் காசிரண்டும் வைகுந்தநல்லூர் அளந்தபடி நிலன் எழுபதரை | யே. அரைக்காணி முந்திரிகைக் கீழ் மூன்றுமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் குளமும் கரை | யும் நிலன் கால்நீக்கி நிலன் எழுபதே காலே அரைக்காணி முந்திரிகைக்கீழ் மூன்றுமா அரைக்காணி முந்திரிகைக்கீ | ழ் நான்கு மாவினுல் நெல்லு ஆயிரத்து நூற்றுக் கலமும் மீன்பாட்டங் காசு இரண்டும் மகிமாலயநல்லூர் அ | ளந்தபடி நிலன் அறுபத்தொன்பதே எட்டுமாவின் கீழரையே மூன்றுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவி | லும் இவ்வூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் சுடுகாடும் நிலன் மூன்றுமாவரைக்காணிக்கீழ் அரையே நான்குமாகாணி | அரைக் காணிக்கீழ்............ நிலன் அறுபத்தொன்பதே நான்குமா முக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே நான் | குமாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவினுல் நெல்லு ஆயிரத்தைஞ் ஞூற்றுக்கலமும் மீன்பாட்ட | ங் காசு ஒன்றும் இந் [நாட்டுக் முழமாத்]தூர் அளந்தபடி நிலன் ஐம்பத்தெட்டே இரண்டுமா வரைக்காணிக் கீழ் மும்மாமு |

பக்கம்—உ.

க்காணிக் கீழ் முக்காலெ ஒருமாவினுல் நெல்லு எண்ணூற் றுக்கலமும் மீன்பாட்டங் காசு ஒன்றும் பரகேச | ரிநல்லூர் அளந்தபடி நிலன் ஐம்பத்தெட்டே மூன்றுமா முக்காணியரைக் காணி முந்திரிகைக் கீழ் காலிலும் இவ்வூ | ர் பிடாரி கோயிலும் திருமுற்றமும் குளமும் கரையும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போய் புறவூர்க்குப்பாயும் கா | மபதாகை வாய்க்காலும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இத்தேவர் குளமும் கரையும் நிலன் | காலே அரைமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காணிக் கீழ் முக்காலே ஒருமா நீக்கி நிலன் ஐம்பத் தேழே | முக்காலே மூன்றுமாக்காணிக்கீழ் நான்குமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்குமாவினுல் நெல்லு எ | ண்ணூற்றுக் கலமும் மீன்பாட்டங் காசு ஒன்றும் பெண்ணுகடம் அளந்தபடி

நிலன் ஐம்பத்தைஞ்சே யரைமாவரைக்காணிக் | கீழ் முக்காலே மூன்றுமாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமாவிலும் இவவூர் நிலத்தை ஊடறுத்துப் போன காமபதாகை வா | ய்க்கால் நிலன் ஒருமா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா நீக்கி நிலன் ஐம்பத்துநாலே முக்காலே மூன் | றுமா முக்காணி முந்திரிகைக் கீழ் ஆறுமாக்காணி அரைக்காணிக் கீழ் எட்டு மாவினுல் நெல்லு அறுநூற்றுக் | கலமும் மீன்பாட்டம் அக்க மெட்டும் உறத்தூர் அளந்தபடி நிலன் ஐம்பத்து நாலேகாலே காணிக்கீழ் காலேயரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இத்தே | வர் குளமும் கரையும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன மும் மடி சோழப் பேராறுமாக நிலன் அரைக்கா | ணிக்கீழ் எட்டு மா நீக்கி நிலன் ஐம்பத்து மூன்றே முக்காலே யரைக்காணி முந்திரி கைக்கீழ் முக்காலே யிரண்டு மாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல் நெல்லு ஆயிரக்கலமும் மீன்பாட்டங் காசு ஒன்று | ம் சிறையூர் அளந்தபடி நிலன் நாற்பத்தொன்பதே இரண்டுமாவரைக்காணிக் கீழரையே நான்கு மாக்காணி யரைக்காணிக் கீழ் எட்டுமாவிலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத் துப்போன காமபதாகை வாய்க்கால் நிலனுறுமா நீக்கி நிலன் அறுபத்தொன்பதே ஒருமாவரை | க்காணிக்கீழரையே நான்கு மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமாவினுல் நெல்லு ஆயிரத்து முந்நூற்றுக் கலமும் | மீன்பாட்டங் காசு ஒன்றும் கீழ்சோற் றுத்துறை அளந்தபடி நிலன் நாற்பத்தைஞ்சரையே மாகாணி முந்திரிகைக் கீழ்......எழுமாவரையரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும் குளமும் கரையும் இவ்வூர் நிலத்தை ஊடறுத் துப்போன கருவா | ய்க்காலான மும்மடி சோழ பேராற்றுலு மாக நிலன் எழுமா வரையரைக்காணி நீக்கி நிலன் நாற்பத் தைஞ்சே மும்மாவ | ரையரைக்காணி முந்திரிகைக்கீழரையே மும்மாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல் நெல்லு ஆயிரக் | கலமும் மீன்பாட்டங் காசொன்றும் நெடுவாயில் அளந்தபடி நிலன் முப்பத்தொன்பதே முக்காலே நான்கு மா வரை | க்காணிக் கீழரையே இரண்டுமா முக்காணிக்கீழ் முக் காலே ஒருமாவிலும் இவ்வூர்ச் சுடுகாடு நிலன் அரைக்காணி முந்திரிகை |

(தொடரும்)

மன்னரும் மக்களும்.

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

சாமி. சிதம்பரனர்.

நன்றி மறக்காத பண்பு ஒரு சிறந்த பண்பாகும்; இப்பண்பு மக்களிடம் மட்டும் அல்லாமல் ஏனைய உயிர்களிடமும் உண்டு; மாடு, ஆடு, குதிரை முதலிய விலங்கினங்கள் தங்களை வளர்ப்போரிடம் நன்றி காட்டுகின்றன.

நாயின் நன்றியறிவை அறியாதார் இல்லை. அதன் நன்றியறிவைப்பற்றி இலக்கியங்களில்கூடக் கூறப்பட்டிருக்கின்றது.

ஆதலால் பகுத்தறிவுள்ள மனிதன் நன்றியறிவுடன் இருப்பதில் வியப்பில்லை. மக்களிலே நன்றி மறந்தவர்கள் இருப்பதுதான் வியப்புக்குரியது. உதவி செய்தோரை மறக்கும் மனிதர்கள், அவர்களைப்பற்றி உள்ளத்தில் எண்ணுத மனிதர்கள், உதவி செய்தோர்க்கு உலைவைக்க முந்தும் மனிதர்கள், உண்டு. இவர்களை மக்கள் என்று கூற முடியாது; உருவத்தில்தான் மக்கள். செயலில் யாரோ அறியோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

நல்லவர்களிடம் நன்றியறியும் குணம் உண்டு; இதைத்தான் செய்ந்நன்றி அறிதல் என்பார்கள். இதன் சிறப்பை—இன்றியமையாமையை வள்ளுவர் விளக்கி யிருக்கின்ருர்; செய்ந்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்திலே இதைக் காணலாம்.

பண்டைத் தமிழ்மக்களிடம் இப்பண்பு படிந்திருந்தது. இப்பண்புக்கு நாம் பல சான்றுகளைத் தேடித்திரிய வேண்டாம். அரசருக்கும் மக்களுக்கும் இருந்த தொடர்பை மட்டும் பார்த்தாலே போதும்.

பண்டைத் தமிழ்மக்கள் தங்கள் மன்னர்களைத் தெய்வமாகவே மதித்து வந்தனர். அரசர் வாழ்வே தங்கள் வாழ்வென்று எண்ணி வந்தனர். அரசர் வாழ்வுக்காகத் தெய்வங்களை வணங்கி வந்தனர். எல்லாப் பெரியோர்களும் அரசர்களை வாழ்த்தி வந்தனர். இதற்குக் காரணம், அரசர்கள் மக்கள் நலமே பெரிதென்று வாழ்ந்ததுதான். இதனுற்ருன் மன்னர்கள் மக்கள் மனத்திலே குடியிருந்தனர்.

முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை வாழ்த்திப் பாடியிருக்கின்ருர். அவன் நீடூழி காலம் நிலைத்து வாழவேண்டும் என்று மனமார

வாழ்த்தியிருக்கின்றார். மக்கள் சார்பாகவே முடிநாகராயர் மன்னனை வாழ்த்துகின்றார்.

"குதிரைப்படைகளையுடைய பாண்டவர்களுடன், கௌரவர் நூற்றுவர் மாறுபட்டனர்: அவர்களுக்குரிய நாட்டையும் தமது நாடாகக் கவர்ந்துகொண்டனர். இதனால் பாரதப்போர் விளைந்தது. இப்போரிலே துரியோதனாதியர் நூறுபேரும் போர் செய்து போர்க்களத்திலே மடியும் வரையிலும் இரு பக்கத்துப் படைகளுக்கும் உணவிட்டாய். வேண்டிய அளவு உணவை மிகுதியாக அளித்தாய். இத்தகைய வள்ளன்மை பொருந்திய சேரனே! பால் தன் இனிமை ஒழிந்து புளிப்பேறினாலும், கதிர் தன் விளக்கம் குன்றி இருண்டுபோனாலும், நான்கு வேதங்களில் கூறப்பட்ட ஒழுக்க முறைகள் மாறுபட்டாலும், நீ நெடுங்காலம் அழிவின்றி வாழ்வாயாக! அந்திக் காலத்திலே, சிறிய கன்றுகளுடன், பெரிய கண்களையுடைய மான் பிணைகள், அந்தணர்கள் வளர்க்கும் முத்தீயாகிய விளக்கு வெளிச்சத்திலே தூங்கிக்கொண்டிருக்கும். இத்தகைய காட்சியையுடையன பொன்னொளி பொருந்திய சிகரங்களையுடைய இமயமலையும், பொதியமலையும்; இந்த மலைகள் என்றும் நிலைத்து நிற்பன; இம்மலைகளைப்போல நீயும், உனது பண்பு வேறுபடாத சுற்றமுடன் நிலைத்து வாழ்வாயாக!" என்பதே அவர் கூறும் வாழ்த்து.

அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேதம் நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ! அத்தை அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே. (புறம் 2)

இதுவே புறநானூற்றுப் பாடற் பகுதி.

இச் செய்யுளிலே மன்னனும் வள்ளல்; அவனுடைய அமைச்சர்கள் முதலிய அலுவலர்களும் நல்லவர்கள்; அனைவரும் நாட்டின் நலத்தை நாடுவோர்; என்ற குறிப்பைக் காணலாம்.

திரியாச்சுற்றம் என்ற சொற்றொடர் அமைச்சர் முதலியோரின் பண்பை விளக்கிற்று. இத்தகைய மன்னரை மக்கள் ஏன் வாழ்த்தமாட்டார்கள்?

காரி கிழார் என்னும் மற்றொரு புலவர் பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமியை வாழ்த்திப் பாடியிருக்கின்றார். இப் பாடலும் மக்கள் மன்னர்களை ஏன் மனமார வாழ்த்தினர் என்பதை விளக்குவதற்குத் துணை செய்யும்.

“உன்னுடன் போர் செய்ய முன்வந்த உன் பகைவர்களின் கோட்டைக்குள், கடல் போன்ற உன் படைகள் நுழைவதற்காக முதலில் உனது யானையை ஏவுவாய்; பசுமையான விளை நிலங்களின் பக்கத்திலேயுள்ள கோட்டைகள் பலவற்றையும் கைக்கொள்வாய். அக்கோட்டைகளிலே கைப்பற்றிய அழகாகச் செய்யப்பட்ட அணிகலன்களையெல்லாம் பரிசிலர்க்கு அவரவர் தகுதியறிந்து கொடுத்துவிடுவாய். உனது குடை முனிவர் போற்றும் முக்கண் மூர்த்தியான சிவபெருமான் கோயிலை வலம் வரும்போது தாழ்க; சிறந்த நான்கு வேதங்களையும் அறிந்த அந்தணர்கள் உன்னை வாழ்த்தும்போது எடுத்த கையின் எதிரில் உன் தலை வணங்குக; பகைவர்களின் நாட்டைச் சுடும்போது எழுந்து சுற்றும் புகையினால் மட்டும் உனது மலர்மாலை வாடுக; உனது மனைவிமார்களின் ஊடிய முகத்தைக் காணும்போது, உனது வெகுளி—சினம்—தணிவதாக; இவ்வாறு, உனது வெற்றியால் நீ செருக்கடையாமல், அவ் வெற்றியை உன் உள்ளத்திலேயே அடக்கிக்கொண்டு வாழும் ஆற்றல் அமைந்தவனே! என்றும் குன்றாத கொடையை உடையவனே! மிகுந்த பெருமையை உடைய குடுமியே! நீ இவ்வுலகிலே குளிர்ந்த ஒளியை உடைய சந்திரனைப்போலவும், சுடுகின்ற ஒளி பொருந்திய கதிர்களையுடைய சூரியனைப்போலவும் நிலைத்து வாழ்வாயாக!”

இதுவே காரி கிழார் கூறும் அரச வாழ்த்து. இதுவும் மக்கள் மன்னரிடம் கொண்டிருந்த அன்பை விளக்குவதாகும்.

செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடல்படை குளிர்ப்ப மண்டி அடல்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவல் படப்பை ஆர்எயில் பலதந்து
அவ்எயில் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்
பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே;

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே;
வாடுக இறைவநின் கண்ணி, ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே;
செலியர் அத்தைநின் வெகுளி வால்இழை
மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே;
ஆங்க,
வென்றி எல்லாம் வென்று அகத்துஅடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே. (புறம் 6)

இதுவே மேலே காட்டிய பொருள் அமைந்த பாடற்பகுதியாகும்.

சுருங்கக் கூறினால், மன்னர்களை வாழ்த்துவதே புறநானூறு ஆகும்; புறநானூற்றின் பெரும்பாலான பாடல்கள், மன்னர்களின் வீரம், கொடை, புகழ், நீதிமுறை இவற்றைக் கூறுகின்றனவாகவே அமைந்திருக்கின்றன.

பதிற்றுப்பத்து நூல் முழுவதும் மன்னர்களை வாழ்த்தும் பாடல்களே. இன்று நமக்குக் கிடைத்திருக்கும் எட்டுப்பத்துக்களும், எட்டுச் சேர மன்னர்களின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன.

பத்துப்பாட்டிலே ஏழு பாட்டுக்கள் பண்டைத் தமிழ் மன்னர்களின் பெருமையைப் பாராட்டும் பாடல்களேயாம்.

பொருநர்ஆற்றுப்படை, பட்டினப்பாலை, இரண்டும் கரிகால் பெருவளத்தானைப் பாராட்டும் பாடல்கள். மதுரைக் காஞ்சியும், நெடுநல் வாடையும் பாண்டியன் நெடுஞ்செழியனை வாழ்த்தும் பாடல்கள். பெரும்பாண்ஆற்றுப்படை தொண்டைமான் இளந்திரயனைப் பாராட்டும் பாட்டு. சிறுபாண்ஆற்றுப்படை நல்லியக்கோடனைப் புகழும் பாட்டு. மலைபடுகடாம் நன்னனைப் பற்றிப் பாராட்டும் பாட்டு. இவ்வாறு பத்துப்பாட்டில் ஏழு பாடல்கள் மன்னர்களை வாழ்த்தும் பாடல்களாக அமைந்திருப்பதைக் காணலாம். இதுவும் பண்டைக்கால மக்கள் மன்னர்கள்பால் எவ்வளவு அன்பு கொண்டிருந்தனர் என்பதை விளக்கும்.

பண்டைக்காலத்தில் அரசன் படையில் இருந்த வீரர்கள், நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்யும் தன்மையுள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் அரசனையும் நாட்டையும் ஒன்றாகவே எண்ணினர். இத்தகைய உறுதியும், அன்பும் உள்ளவர்களையே படை வீரர்களாகச் சேர்த்து வந்தனர்.

"உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். (குறள். 778)

போர் மூண்டால், உயிருக்கு அஞ்சாமற் போர் புரியும் வீரர்கள், அரசன் தம்மேல் சினந்தாலும் சிறந்த தம் கடமையில் தவற மாட்டார்கள்" என்று வள்ளுவர் படை வீரர்களின் தன்மையை எடுத்துக் கூறுகின்றார்.

பண்டைக்காலப் படை வீரர்கள் அரசன் வெற்றிக்காக உயிர்விடப் பின்வாங்குவதில்லை. இது படை வீரர்களின் நாட்டுப் பற்றையே விளக்குவதாகும்.

பண்டைப் படை வீரர்கள், தம் அரசன் வெற்றிபெற வேண்டும் என்று தெய்வத்தை வேண்டிக்கொள்ளுவார்கள்; தங்கள் தலையைத் தாங்களே தெய்வத்தின் முன்னிலையில் பலி பீடத்தில் அறுத்து வைப்பார்கள். இந்த வழக்கம் தமிழகப் படைவீரர்கள்பால் இருந்தது.

"ஆர்த்துக் களம்கொண்டோர் ஆர்அமர் அழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலம்கொள வைத்துஆங்கு".

ஆரவாரித்து வெற்றிகொண்டவர்கள், போர்க்களத்திலே, பகைவர்க்கு அச்சத்தைத் தந்து, கடைக்கண் சிவந்த கடுமையான பார்வையையுடைய தலையைத் தாமே அறுப்பர்; வெற்றியையுடைய எமது அரசன் மேலும் வெற்றியடைக என்று வாழ்த்துவர்; நல்ல பலிபீடத்திலே, அரசன் நன்மை அடையும் படி வைப்பர்" (இந்திர விழவு 83-86) என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதனால் பழங்காலத்துப் படை வீரர்கள் தங்கள் வேந்தர்களிடம் வைத்திருந்த உள்ளன்பை உணரலாம்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்.

நீதி முறைகளைச் செய்து குடிமக்களைக் காப்பாற்றும் வேந்தன், மக்களுக்குத் தெய்வம் என்றே சிறப்பாக மதிக்கப் படுவான்" (கு. 388) என்ற வள்ளுவர் கூற்றும், மன்னர்களை—மக்களுக்கு நலம் புரிந்த மன்னர்களை—மக்கள் எப்படிப் போற்றி வந்தனர் என்பதைக் காட்டும்.

வள்ளுவர் கூறிய இவ்வுண்மையைச் சிலப்பதிகார ஆசிரியர் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றார். ஆய்ச்சியர் குரவையிலே இதனைக் காணலாம்;

"கோவா மலைஆரம், கோத்த கடல்ஆரம்
தேவர்கோன் பூண்ஆரம் தென்னர்கோன் மார்பினவே;

தேவர்கோன் பூண்ஆரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பாரால்.

கோக்கப்படாத பொதியின் மலை ஆரம்; கோக்கப்பட்ட கடல் ஆரம்; இந்திரன் பூண்ட பூணுகிய ஆரம்; இம்மூன்றும் பாண்டியன் மார்பிலே உள்ளன; இவ்வாறு தேவர்கோன் ஆரம் முதலியவற்றைப் பூண்டவன் யார் என்றால், செழிப்புள்ள துவாரகையிலே வளர்ந்தவன்; பசு மந்தையை மேய்த்தவன்; குருந்த மரத்தை ஒடித்தவன்; ஆகிய கண்ணன் என்பர்". இவ்வாறு பாண்டியனைத் திருமாலாக வைத்துப் போற்றி வாழ்த்துகிறது இப்பாடல்.

பொன்இமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ஆண்டான்
மன்னன் வளவன் மதில்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதில்புகார் வாழ்வேந்தன்
பொன்அம் திகிரிப் பொருபடையான் என்பர்ஆல்.

பொன்னுகிய இமயமலையின் உச்சியிலே தன் புலிமுத்திரையைப் பொறித்தவன்; இமயமலையை வடவெல்லையாகக்கொண்டு அதற்கு இப்பால் உள்ள நாட்டையெல்லாம் ஆண்டவன்; மதில் சூழ்ந்த புகார் நகரில் வாழ்கின்ற சோழ மன்னன்; அச்சோழன் யார் என்றால், பொன்னொளி வீசும் சக்கரப் படையைத் தனது போர்ப்படையாகக் கொண்ட திருமாலே என்பர்". இப்பாடல் சோழ மன்னனைத் திருமாலின் உருவாகப் போற்றி வாழ்த்துகின்றது.

"முந்நீரின் உள்புக்கு மூவாக் கடம்புஎறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கல்நவில் தோள்ஓச்சிக் கடல்கடைந்தான் என்பர்ஆல்.

கடலின் உள்ளே சென்று, முதிராமல் செழித்துநின்ற கடம்ப மரத்தை வெட்டி எறிந்தவன்; வளங்கள் நிறைந்த வஞ்சிமா நகரில் வாழ்கின்ற, வேந்தனுகிய சேரன்; அவன் யார் என்றால், மலை என்று சொல்லப்பட்ட தன் தோள்களை வீசிக் கடலைக்கடந்த திருமால் என்று சொல்லுவர்". இப்பாடல் சேரனைத் திருமாலின் அவதாரம் என்று கூறிற்று.

மேலே காட்டிய சிலப்பதிகாரச் செய்யுட்கள், பாண்டிய, சோழ, சேர மன்னர்களைத் திருமாலின் அவதாரங்கள் என்றே கூறின. வள்ளுவர் குறளை விளக்கும் முறையிலே இப்பாடல்கள் அமைந்திருக்கின்றன.

மன்னர்களைத் திருமாலின் வடிவமாக மக்கள் எண்ணினர் என்பதை நம்மாழ்வார் பாடல் ஒன்றும் கூறுகின்றது.

திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே என்னும்
உருவுடை வண்ணங்கள் காணில்
உலகளந்தான் என்று துள்ளும்;
கருஉடைத் தேஇல்கள் எல்லாம்
கடல்வண்ணன் கோயிலே என்னும்
வெருவிலும் வீழ்விலும் ஓவாக்
கண்ணன் கழல்கள் விரும்புமே.

என்பது திருவாய்மொழி. இதில் உள்ள "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்னும் அடி குறிப்பிடத் தகுந்தது. சிலப்பதிகாரப் பாடலின் கருத்தும், இதுவும் ஒத்திருப்பதைக் காணலாம்.

மன்னர்களைத் திருமாலின் அவதாரம் என்று கூறும் வழக்கம் தமிழ் நூல்களிலே மலிந்து கிடக்கின்றது. சங்ககால நூல்களிலே இவ்வழக்கத்தைக் காணமுடியவில்லை; சங்க காலத்திற்குப் பிற்பட்டெழுந்த நூல்கள் எல்லாம் மன்னர்களை மாயோன் பிறப்பென்றே கூறுகின்றன.

கலிங்கத்துப்பரணியிலே விசயதரனுடைய பிறப்பு வளர்ப்பைப்பற்றி 'அவதாரம்' என்ற பகுதியிலே கூறப்படுகின்றது.

1. அன்றுஇலங்கை பொருதுஅழித்த அவனேஅப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றுஇலங்கு கதிர்ஆழி விசயதரன்
எனஉதித்தான் விளம்பக் கேண்மின்!

2. தேவர்எலாம் குறைஇரப்பத் தேவகிதன்
திருவயிற்றில் வசுதே வற்கு
மூவுலகும் தொழநெடுமால் முன்ஒருநாள்
அவதாரம் செய்த பின்னை

3. இருள் முழுதும் புவிஅகல, இரவிகுலம்
இனிதுஇலங்க இராச ராசன்
அருள்திருவின் திருவயிறும் ஆல்இலையின்
அவதரித்தான் அவனே மீள.

இவை செயங்கொண்டார் கூற்று.

"இலங்கையைப் போர் செய்து அழித்த இராமனே கண்ணனாகப் பிறந்தான்; பாரதப்போரை முடித்தான்; அவனே வெற்றிபெற்று விளங்குகின்ற சக்கரப்படையையுடைய விசயதரன் என்ற பெயருடன் பிறந்தான்.

"தேவர்கள் பூமிபாரத்தை ஒழிக்கும்படி வேண்டிக்கொண்டனர்; அதனால் வசுதேவனுக்குத் தேவகியின் வயிற்றிலே

திருமால் பிறந்தான்; மூவுலகும் தொழுது வணங்கும்படி கண்ணனாகப் பிறந்தான்.

"அதன்பின் உலகில் உள்ள இருள் நீங்க, சூரியகுலம் புகழ் பெற்று ஓங்க இராசராசனுடைய மகள் வயிறாகிய ஆலிலையிலே விசயதரனாக அவதரித்தான்".

இச்செய்திகளே மேலே காட்டிய கலிங்கத்துப்பரணிப் பாடல்களிலே கூறப்பட்டன.

ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட உலாக்கள் எல்லாம் மன்னர்களைத் திருமால் அவதாரம் என்றே கூறுகின்றன.

"கையும் மலர் அடியும், கண்ணும், கனிவாயும்
செய்ய கரிய திருமாலை"

கைகளும், மலர்போன்ற அடிகளும், கண்களும், கனிபோன்ற வாயும், சிவந்திருக்கின்ற கரியநிறமுள்ள திருமாலாகிய விக்கிரம சோழனை" (விக்கிரம சோழன் உலா 158) என்று விக்கிரம சோழனைத் திருமாலாகவே கூறுகிறார் ஒட்டக்கூத்தர்.

ஒறுக்கும் மிதிலை ஒருவில்லைத் தொல்லை
இறுக்கும்அவன் இவன் என்பார்—மறுக்காமல்
சென்று கனைகடல் தூர்த்துத் திருக்குலத்து
நின்ற பழிதுடைப்பாய் நீ என்பார்.

குலோத்துங்க சோழன் உலா 116—117

இவைகள் குலோத்துங்க சோழன் உலாவிலே கண்டவை. குலோத்துங்க சோழனை இராமனாக உருவகம் செய்திருப்பதை இக்கண்ணிகளிலே காணலாம்.

"சிலையால் வழிபடு தெண்திரையைப் பண்டு
மலையால் வழிபட வைத்தோன்"

இராசராசசோழன் உலா 12

என்று இராசராசன் இராமனாகக் கூறப்படுகின்றான்.

இராசராச சோழன் உலாவிலே பின்னும் மன்னன் திருமாலின் அவதாரமாகவே கூறப்படுகின்றான்,

மன்னவநீ

379. முன்பு கருடன் முழுக்கழுத்தில் ஏறுவது
பின்பு களிற்றின் பிணர்க்கழுத்தே—மின்போல்
380. இமைக்கும் கடவுள் உடையினைப்பண்டு இப்போது
அமைக்கும் துகிலினை அன்றே—அமைத்தது ஓர்
381. பாற்கடல் சிபாஞ்ச சன்னியம்பண்டு, இப்போது
கார்க்கடல் சென்று சங்கே—சீர்க்கின்ற
382. தண் அம் துழாய் பண்டு சாத்தும் திருத்தாமம்
கண்ணி இன்று ஆரின் கவட்டுஇலையே—தண்என்ற

383. பள்ளிஅறை பாற்கடலே பண்டு, திருத்துயில்கூர்
பள்ளிஅறை இன்று பாசறையே.

இவ்வடிகளும், இராசராச சோழனைத் திருமாலின் அவதாரமாகவே கூறுகின்றன.

செயங்கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கத்துப்பரணி; ஒட்டக்கூத்தப் புலவரால் பாடப்பட்ட மூவர் உலா; இவைகள் எல்லாம் மன்னர்களை வாழ்த்தும் நூல்களேயாகும். மூவருலா என்பது, விக்கிரமசோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா இராசராச சோழன் உலா, ஆகிய மூன்றும் சேர்ந்த தொகுதி.

ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணியிலும் மன்னர் புகழைப் பாடாமல் விடவில்லை. சோழமன்னர்களின் பெருமையைப் பாராட்டிப் பாடுகின்றார்.

சிவஞானச்செல்வராகிய ஞானசம்பந்தரும் மன்னனை வாழ்த்துகின்றார்.

வாழ்க அந்தணர், வானவர் ஆன்இனம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயஎல்லாம்; அரன் நாமமே
சூழ்க ; வையக மும்துயர் தீர்கவே.

என்பது சம்பந்தர் பாடல். மன்னன் சிறந்து வாழ்க என்று வாழ்த்துகின்றார். மன்னர்களின் பாதுகாவலால்தான் மக்கள் நலம்பெற்று வாழ முடியும் என்ற நம்பிக்கை நிலவியிருந்த காலத்தில் அனைவரும் இவ்வாறு மன்னனை வாழ்த்தினர்.

மக்கள் நன்மையைக் குறிக்கோளாகக்கொண்டு உழைப்பவர்கள் எக்காலத்திலும் போற்றப்படுவார்கள்; எல்லோராலும் போற்றப்படுவார்கள்.

இன்றும் மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் அரசியல் தலைவர்கள் போற்றப்படுகின்றனர்; மக்கள் நலங்கருதி உழைக்கும் அரசாங்கத் தலைவர்கள் கொண்டாடப்படுகின்றனர். மக்கள் நன்மை ஒன்றையே கருதி உழைப்பவர்கள், மன்னர்களைவிட இன்னும் மிகுந்த சர்வாதிகாரம் படைத்தவர்களாயிருந்தாலும் அவர்களும் போற்றப்படுகின்றனர்.

நமது நாட்டில் வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்திலே அரசாங்கத் தொடர்புள்ள ஒவ்வொரு விழாக்களின் முடிவிலும் அரச வாழ்த்துப் பாடும் வழக்கம் இருந்தது. இன்றும் இங்கிலாந்திலே அவ்வழக்கம் உண்டு; அரசர்கள் ஆளும் நாடுகளில் எல்லாம் அரச வாழ்த்துப் பாடும் வழக்கம் உண்டு. இது போலவேதான் பண்டைத் தமிழகத்தில், மக்கள் மன்னர்களைக்

மக்கள் தொண்டு

வித்துவான். சொ. சிங்காரவேலனர்
தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர்.

லீ. ஹண்ட் (F. H. LEIGH HUNT) எழுதிய 'அபூ பென் ஆதம்' (ABOU - BEN - ADHEM) என்ற ஆங்கிலக் கவிதையைத் தழுவியது.

---

1. நள்ளிரவு நேரமது; நடுவா னத்தில்
நானிலத்தின் ஒளிப்பிழம்பாய் இயற்கைக் கூத்தாய்த்
தெள்ளியநன் னிலவமுதைத் தெளித்து நின்று
திரும்புகின்ற பக்கமெல்லாம் நிலவின் ஆட்சி
வெள்ளமுற நிகழ்த்திநின்ருன் மதியோன்; விண்மீன்
வேல்விழியார் பலர்கூடி ஆடல் செய்தார்;
துள்ளியெழுந் தோர்கனவின் தொடக்கத் தாலே
துயர்நீங்கி உட்கார்ந்தான் சொக்கன்; ஆங்கே,

2. ஒளிக்கற்றை உருப்பெற்றிவ் வில்லத் துள்ளே
ஓவியமாய்த் திகழ்ந்ததுபோல் ஓர்அணங்கு
வெளிப்பக்கம் அடுத்திருந்த அறையினுக்குள்
விரைந்தெதுவோ வரைந்திருக்கும் காட்சி கண்டான்.
பளிச்சென்று சிந்தையிலே மின்னல் வெட்டப்
பாவையவள் யாவளென அறியும் முன்னல்,
கிளிச்சொல்லாள் எழுதுகின்ற செய்தி காணக்
கிளர்ந்திடுவான்; சொக்கனுடன் கேட்டான்ஈதே:—

3. "எழுதுவதிங் கெதனைநீ" என்று கேட்டான்;
இருகண்ணுல் பருகுவள்போல் மலர்ந்து நோக்கி,
எழுதியமைக் கண்ணுலே இமையா நாட்டம்
இணைகின்ற அப்பாவை இயம்ப லுற்ருள்:—

[333-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டாடி வந்தனர். ஆனுல் தமிழ் மக்கள் மன்னர்களின் ஆணைக்கு அஞ்சி அவர்களைப் போற்றவில்லை; அவர்களுடைய பணியைப் பாராட்டிப் போற்றினுர்கள். இந்த உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

இனி, மன்னர்களின் ஆட்சி வரப்போவதில்லை; மக்களாட்சி தான் இனித் தொடர்ந்து வாழ முடியும். மக்களாட்சியைத் திறம்பட நடத்திவைக்கும் தலைவர்கள்—தந்நலம் அற்ற சான்றோர் கள்—நாட்டு மக்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் மக்களால் போற்றப்படுவார்கள் என்பதில் ஐயம் இல்லை; பழைய மன்னர்களைப்போலவே பாராட்டத்தான் பெறுவார்கள். இது மக்கள் இரத்தத்தோடு கலந்திருக்கும் பழம்பெரும் பண்பாடு; செய்ந்நன்றி அறிதல் என்னும் சிறந்த ஒழுக்கம்.

"தொழுதலுறும் இறைவனவன் அடியார் தம்மைத்
துகளறயான் எழுதிடுவல்". கேட்ட சொக்கன்
விழுதலுறும் வேட்கையினுல் "என்பேர் அங்கு
விளங்கிடுமோ" என்றவொரு வினவைப் போட்டான்!

4. "இல்லை" யென்று சிரித்தபடி சொன்னுள், தெய்வ
எழிற்பாவை; கலங்கிவிட்ட சொக்கன் மீண்டும்
"இல்லையென்று சொவ்லிவிட்டாய், ஆயின் என்னை
இவ்வுலக மக்களுக்கோர் அன்பன் என்றே
தொல்லையற எழுதிக்கொள்" என்று சொல்லத்
துடியிடையாள் எழுதிவிட்டு மறைந்தாள் வானில்;
எல்லையுறும் பகல் சென்றே இரவுமீள
இணைந்தனள்பின் னுளுமவன் இல்லத் துள்ளே.

5. "நெஞ்சுறையும் தெய்வீக அணங்கே! எங்கே,
நீயெழுதி வைத்ததனைக் காண்பி" என்று
நெஞ்சளைந்து பேசியவச் சொக்க னுக்கு
நேரிழையாள் காட்டினளவ் வரிசை தன்னில்;
விஞ்சுபுகழ் இறையடியர் எவர்க்கும் முன்னுல்
விளங்கிற்றுச் சொக்கனது திருப்பேர்! ஆமாம்;
எஞ்சலிலா மக்களுக்கீண் டியற்றும் தொண்டே
இறையவனுக் காற்றிடுமோர் புனிதத் தொண்டாம்!

வாழ்த்து.

★

பண்டைப் பெருமொழிகளுளொன்ருய்ச் சிறந்து, செம்மைப் பண்பு நிறைந்து, தனித்தியங்கும் சிறப்புஞ் செழுமையுஞ் சான்ற நம் தமிழ் மொழியின் ஆக்கமே நோக்கமாகக்கொண்டு பணியாற்றும் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினரும், ஆட்சிக் குழு வினருளொருவரும், வழக்குரைஞரும், கரந்தைப் புலவர் கல்லூரிக் குப் பொருளுதவிவரும் திருச்சி பொன்னுசாமிப் பிள்ளையவர்கள் அறநிலையப் பாதுகாவலரும் பொதுநலத் தொண்டரும் ஆகிய திரு. தி. பொ. வேதாசலம் அவர்கட்கு 20—1—1958 அன்று 60-ஆம் ஆண்டு நிரம்பப்பெற்றமை கருதிப் பெருமகிழ்ச்சியடைகின்ரேம்.

"சிறப்புடை மரபில் பொருளுமின்பமும் அறத்து வழிப்படூஉம்" என்ற தமிழ்ப் பெருமக்களின் வாழ்க்கைக்கிணங்க வருநர்க்குதவி இன்புறும் நண்பின் பண்புடை அன்பர் திரு. தி. பொ. வேதாசலம் அவர்களும் அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் திரு. பங்கயவல்லி அம்மையார் அவர்களும் பெருவளம் பழுனித் தமிழ் நாட்டுக்கும், தமிழர் வாழ்வுக்கும் உறுதுணையாய் நின்று நோயின்றியன்ற யாக்கையொடு நீடு வாழ்வார்களாக! பொழிற்ரெண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

ஓர் மதிப்புரை.

* கங்காதேவி எழுதிய மதுரா விஜயம்.

[நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.]

மாலிக் காபூரின் தென்னாட்டுப் படையெடுப்பு, மகமதியரின் ஆட்சியைத் தமிழ் நாட்டில் புகுத்தவில்லை; அது, ஒரு பெரும் கொள்ளைக் கூட்டத்தின் நிலைமையில் எவ்வளவு தீங்கு நாட்டிற்குச் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து நாட்டின் செல்வப் பகுதிகளை யெல்லாம் சீர் அழித்துவிட்டது. மேலும், சமய வெறியும் உடன் கூடி, உயர்ந்த பண்பாடுகளை விளக்கி வந்தனவான பல கலைகளையும் நிலையங்களையும் பாழ்படுத்தியது. தமிழ் நாட்டின் செல்வப் பெருக்கைத் தெரிந்துகொண்ட பின்னர், தில்லி மன்னர்கள் விட்டுவிடுவார்களா? இந்தப் பகுதியையும் தங்கள் பேரரசுக்குள் அடக்க எண்ணினர். மாலிக் காபூர், கி. பி. 1312ல், தன் தென்னாட்டுக் கொள்ளைப் படையெடுப்பை ஒருவாறு முடித்துக்கொண்டு, பெருநிதியுடன் தில்லிக்குத் திரும்பினான்; அவன், மதுரையில் வைத்திருந்த நிலைப் படையும் வலியற்றதாயிற்று. கி. பி. 1313 லேயே, ஒரு சேர மன்னன் மதுரையைக் கைப்பற்றிக் காஞ்சீபுரம் வரையில் தன் ஆட்சிக்குள் அடக்கிவிட்டான். தமிழகத்தைத் தமதாக்க எண்ணிய தில்லி மன்னர், மறுமுறையும் படையெடுத்து நாட்டின் பல பகுதியையும் தில்லி ஆட்சிக்கு உள்ளாக்கினர். இந்தப் படையெடுப்பைப் பற்றிய சில விளக்கமான குறிப்புக்கள், வைணவ குருபரம்பரை, கோயிலொழுகு முதலிய தமிழ் நூல்களிலும், மகமதியர்கள் எழுதியுள்ள வரலாறுகளிலும், காணப்பெறுகின்றன.

கி. பி. 1323-ல், தில்லி மகமதிய ஆட்சி, தமிழகத்தில் நுழைந்து நாடு முழுவதையும், மகமதிய ஆட்சிக்கு உள்ளாக்கியது. தில்லியாட்சியின், படி யாட்சி ஒன்று, மதுரையில், நிலைபெறுத்தப்பெற்றது. இந்த நிலையில், தில்லி மகமதிய ஆட்சிக்கு, சில இன்னல்கள் நேர்ந்தன; அவ் இன்னல்களைப் போக்கிக் கொள்வதிலேயே தில்லியாட்சியின் நோக்கம் தங்கும் என்பதை மதுரையிலிருந்த ஒரு மகமதிய சேவகன் நண்குணர்ந்தான்; இவன் மதுரை நகரத்தின் கொத்தவால் என்ற அலுவலைப் பார்த்துவந்தவன்; தக்க சமயம் பார்த்து தில்லியாட்சியின் முதன்மையான தலைவர்களாகவும், உறுதியான ஊழியர்களாகவும் மதுரையில் தங்கியிருந்தவர்களை வாளுக்கு இரையாக்கினான்; ஏனை மகமதியர்களைத் தன் பக்கமாகச் சேர்த்துக் கொண்டான்; உடனே தான் ஒரு தனி அரசனாக மதுரையில்

---

* மதுராவிஜயம் — வடமொழிநூல் — கங்காதேவி இயற்றியது. ஆங்கில மொழிபெயர்ப்பு. பதிப்பாசிரியர் திரு. S. திருவேங்கடாச்சாரியார் — அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு.

அரசாளத் தொடங்கி, கி. பி. 1335ல், தன் பெயராலேயே பொற் காசுகளேயும், வெள்ளிக் காசுகளேயும் வெளியிடுவானுயினுன். இவன் தன்னே, முகமதுநபியின் வழிவந்தவனுகவும், தில்லி மகமதிய மன்னர் சமயப்பற்று குன்றினவர்களாக ஆகிவிட்டபடியால் இஸ்லாமிய சமயத்தை நாட்டுவதற்கு, தான், இவ்வாறு தனியரசு ஒன்றைக் காணவேண்டியாயிற்று என்றும் சொல்லிக்கொண்டான். தனக்குச் சிறப்புப் பெயர்களாக 'இரவலர் தந்தை', 'உலகவொளி', 'சமய வொளி', எனப் பலவற்றையும் சூட்டிக்கொண்டான். இவனே, 'மதுரைச் சுலுத்தானியம்' என்ற ஒரு தனியரசின் முதல்வனுவான். இந்தத் தனியரசும் கி. பி. 1335 லிருந்து கி. பி. 1371 வரை, முப்பத்தாறு ஆண்டுகள், தான் செய்யவேண்டிய கொடுமைகளே எல்லாம் செய்து, நாட்டு வரலாற்றையே மாசுபடுத்திவிட்டு அழிந்துவிட்டது. இந்த முப்பத்தாறு ஆண்டுகளுக்குள் ஆறு சுலுத்தான்கள் ஆட்சி செய்து அழிந்தனர்; இவர்கள் கொடுமைகளேப் பற்றிய குறிப்புக்கள் பல, இவர்களுடன் விருந்தினராகத் தங்கியிருந்த முகமதிய வரலாற்ருசிரியர் எழுத்துக்களில் காணலாம்.

ஜலால்உதீன், வஞ்சகமாக மதுரையைப் பற்றி, தனியரசு நிறுவினன் என்னும் செய்தி, தில்லி மன்னனுக்குத் தெரிந்தவுடன், அவனே அடக்கிக் கொணர்வதற்கென, ஒரு படையை, மதுரைக்கு அனுப்பினுன். அந்தப் படை, மதுரையை அணுகியவுடன், ஜலால் உதீன் உடன் சேர்ந்துகொண்டது. மன்னன், இச்செய்தியைக் கேட்டு மனம் கொதித்துத் தானே நேரில் படையுடன் வர எண்ணி, வேண்டிய ஏற்பாடுகளேச் செய்துகொண்டிருக்கும்போது, வடநாட்டில் நேர்ந்த பல கலகங்களாலும், குழப்பங்களாலும் சிறிது காலந் தாழ்த்தவேண்டியதாயிற்று. இவற்றையெல்லாம் ஒருவாறு ஒதுக்கிப் புறப்பட்டு வரும் வழியில், மன்னன் படையுடன் தங்கியிருந்த இடத்தில், கொடிய வெப்பு நோய் பரவி பலர் மாண்டனர்; ஒரு நச்சுக் காற்று தோன்றி படைத்தலேவர்கள் பலரையும் மாய்த்தது; உடன்வந்த மக்கள் பலரும் மாண்டனர்; மன்னவன் மனம் தளர்ந்து மதுரைப் படையெடுப்பைக் கைவிட்டுத் தன் தலேநகருக்குத் திரும்பும் முயற்சியில் ஈடுபட்டான். இங்கு, மதுரைச் சுலுத்தானியம், தில்லியின் கட்டுப்பாடு ஒரு சிறிதும் இன்றி நிற்கத் தொடங்கியது. தில்லி மன்னன் முகமதின் சீற்றம், ஜலால்உதீன் மகனும், தன் அணுக்கத் தொண்டர்களுள் ஒருவனுமாகிய இப்ராஹிம் என்பவனே, இரு கூருக வாளால் பிளந்ததுடன் நிற்கவேண்டியதாயிற்று. இந்த ஜலால் உதீனும் கி. பி. 1340ல், தன்னுடைய பெருங்குடி மக்களுள் ஒருவனுல் கொல்லப்பெற்று மாண்டு ஒழிந்தான்.

இவனுக்குப் பின்பு, இவனுடைய ஆட்சியாளர்களில் ஒருவனுகிய, அலாவுதீன் உதௌஜி என்பவன் சுலுத்தானுக ஓராண்டு ஆட்சி செய்து ஒழிந்தான். இவன், ஒருமுறை, தன் ஊருக்கு அருகிலுள்ள இந்துக்கள் மீது படையெடுத்துப் பெரும் பொருளேக் கொள்ளே கொண்டு வந்தான். மறுமுறையும், இவ்வாறு சென்று கொள்ளே

கொண்டுவரும்போது பல மக்களைத் தன் வாளுக்கு இரையாக்கினன். அப்பொழுது, தண்ணீர் குடிப்பதற்காகத் தன் தலைக்கவசத்தை எடுத்தான்; எங்கு இருந்தோ ஒரு அம்பு அவன்மேல் பாய்ந்து ஒரு நொடியில் கொன்று வீழ்த்தியது.

இவனுக்குப் பின்னர், இவன் மருமகன், குட்டுப் உடீன் என்பவன் நாற்பது நாட்கள் சுலுத்தானக ஆட்சி செலுத்தினன். இவனுடைய செயல்கள் மிகவும் வெறுக்கத் தக்கனவாக இருந்தமையால் மிகக் குறுகிய நாட்களிலேயே மக்கள் மனம் வெறுத்து இவனைக் கொன்றுவிட்டார்கள் என்ற அளவில்தான் நமக்குத் தெரிகிறது.

பின்னர், கி. பி. 1341 ல், கியாஸ்உடீன் தம்கானி என்பவன் மதுரைச் சுலுத்தானக ஆட்சியேற்றான். இவன், முன்பு, தில்லியில் குதிரை வீரனக இருந்தவன்; மதுரை முதல் சுலுத்தானகிய ஜலால் உடீனின் மகளை மணந்தவன். இவன் மனைவியின் உடன்பிறந்தாளை இபுன்பதுதா என்னும் மூர் வகுப்பு இஸ்லாமியன் மணந்தான்; இவன் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்து எழுதிவைக்கச் செய்த குறிப்புக்கள் வரலாற்று விளக்கத்துக்குப் பெரிதும் பயன்பெறுவனவாகும். தென்னட்டைப் பற்றியும், மதுரைச் சுலுத்தான் கியாஸ் உடீனைப் பற்றியும் இவன் தொகுத்துள்ள குறிப்புக்கள் கருதத் தக்கனவாகும். கியாஸ் உடீனுடைய கொடுமைகளைப் பற்றி இவன் மனம் பதைபதைத்து எழுதிவைத்துள்ள குறிப்புக்களைப் படிக்கும் கண்ணும், கேட்கும் செவியும், கொள்ளும் உள்ளமும் தீய்ந்து மாய்வனவாகும். இவைகளைக் குறிப்பிடுவது நம் கருத்தல்ல எனினும், வரலாற்று உண்மைகளை மறைத்தல் கூடாது என்னும் கடமையால் இபுன்பதுதா குறிப்புக்களிலிருந்து, ஒன்று இரண்டு, மொழிபெயர்த்துக் கீழே கொடுக்கப்பெறுகிறது:—

"சுலுத்தானிடம் செல்கின்றவர், காலில் மிதியடி இல்லாமல் போகக்கூடாது என்ற ஒரு வழக்கம் அங்கு இருக்கிறது; என்னிடம் மிதியடி இல்லை; அங்கு இருந்த இஸ்லாமியன் அல்லாத ஒருவன் தன் மிதியடியை எனக்குக் கொடுத்து உதவினன்; அங்கு முஸல்மான்களும் இருந்தார்கள். முஸல்மான்களைவிட, முஸல்மான் அல்லாத ஒருவன் எனக்குச் செய்த உதவியால் நான் வியப்படைந்தேன்.

"நாங்கள் செல்லவேண்டிய வழி மரம் அடர்ந்த காடாக இருந்தது.........அந்தக் காடுகளில் காணப்பெற்ற இஸ்லாமியரல்லாதார் எல்லாம் சிறை செய்யப்பெற்றனர். ஒவ்வொருவனும், மனைவியும் மக்களும் சூழ, (நாங்கள்) தங்கும் இடத்திற்கு அழைத்து வரப்பெற்றான்......தங்கும் இடத்தைச் சுற்றிலும் வேலி கோலப்பெற்றிருந்தது......முன் நாள் சிறை செய்யப்பெற்ற இந்துக்கள் எல்லாம் நான்கு பிரிவாகப் பிரிக்கப்பெற்று வெளி வேலியின் நான்கு வாயில்களுக்கும் அழைத்துச் செல்லப்பெற்றனர். அவரவர் சுமந்துவந்த கூரிய முனை மரங்களில் கழுவேற்றப் பெற்றனர். அவர்கள் மனை

வியர் சின்னபின்னமாக வெட்டப்பெற்று தலே மயிர்களேக் கழு மரங்களில் கட்டித் தொங்கவிடப் பெற்றனர். குழந்தைகள் அவ ரவர் தாயர்களின் நெஞ்சின்மேல் வைத்து வெட்டப் பெற்றனர் ...... இத்தகைய மானம்கெட்ட பழக்கத்தை எந்த அரசனும் கையாள நான் கண்டதில்லே. இதனுல்தான் கடவுள் கியாஸ்உடீனுடைய முடிவை விரைவுபடுத்தினர்.

"ஒரு நாள் நானும் காஜியும் இந்த மன்னனுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்...... உருவ வழிபாடு செய்பவன் ஒருவன், அவன் மனேவியுடனும், ஏழு வயதுள்ள மகனுடனும், இவன் முன் கொண்டுவரப்பெற்றனன் ... ... நான் என் கண்களே வேறு பக்கம் திருப்பிக்கொண்டேன்... என்னே அமைதி செய்துகொண்டு பார்த்த போது அவர்கள் தலேகள் தரையில் கிடக்கக் கண்டேன்".

மதுரைச் சுலுத்தான்கள் ஆட்சி, மிகச் சுருங்கிய காலத்தின தாகவிருப்பினும், இவர்கள் ஆட்சியை வலுப்படுத்துவதற்கும், பரப் புவதற்கும், உள் நாட்டிலும், கடற்கரைப் பட்டினங்களிலும் மகமதி யர்கள் செறிந்த பல ஊர்களேத் தோற்றியும் வலுப்படுத்தியும் இருந் திருக்கிருர்கள். இவர்களுடைய உள் நாட்டு அரண்களில், மதுரைக்கு அடுத்தபடியாகக் கண்ணனூர் — கொப்பம் என்பது ஒன்று; இது திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ளது. இந்த அரணேக் கைப்பற்றவேண்டி போசல பேரரசனுகிய வீர வல்லாளன், கியாஸ் உடீன் ஆட்சிக் காலத்தில், இதை முற்றுகையிட்டான். வீர வல்லாளனது படை மிகவும் பெரியது; நூருயிரத்துக்கு மேற்பட்ட காலாள்களே உடையது எனக் கூறப்படுகிறது; இதற்கு மேலாக இருபது ஆயிரம் துருக்க வீரர்கள் வேறு இருந்திருக்கிருர்கள்; பற்ருக்குறைக்கு, குற்றவாளிகள், வேலேயற்றவர்கள், கயவர்கள் முதலிய கூட்டம் வேறு. கொப்பத்து மகமதியர் கூட்டமும் படை யும் நடுக்கம் கொண்டது; பலர் மதுரைக்கு ஓடினர். கோட் டைக்குள் இருந்தவர்கள் ஆறு மாதம் வரையில் இடங்கொடா மலிருந்தார்கள்; பிறகு கைவசம் இருந்த உணவுப் பொருள் பதினன்கு நாட்களுக்குமேல தாங்காது என்பது தெரிந்து தளர்ந் தார்கள். வீரவல்லாளன், கோட்டையைத் தன்னிடம் விட்டு விட்டால், ஒரு இடையூறுமின்றி மகமதியர்களேத் தன் பொறுப்பில் மதுரையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவதாக உறுதிகொடுத் தான். மகமதியர்கள், தாங்கள் எதற்கு ஒப்புக்கொள்ளுவதாயினும், மதுரைச் சுலுத்தானுடைய ஒப்பம் பெற்றே செய்யவேண்டியிருக்கிற

படியால் இச்செய்தியை மதுரைக்கு அனுப்பி அவ்விடத்திய கருத்தைத் தெரிந்துகொள்ளும்வரை போரை நிறுத்திவைக்கவேண்டினர். அவ்வாறே வீரவல்லாளனும் போரை நிறுத்தினுன்; மகமதியர்களும் மதுரைக்குச் செய்தி அனுப்பினுர்கள்.

கொப்பத்தின் செய்தியை, மதுரையில், சுலுத்தான், தன் குடி மக்களுக்குத் தெரிவித்தான்; இஸ்லாமியர் எல்லோரும் அழுதார்கள்; கொப்பம் சென்ருல் மதுரையும் சென்றுவிடுமே, பின்னர் இஸ்லாம் சமயத்தின் நிலே என்னவாகும் எனக் கலங்கினுர்கள். 'எங்கள் உயிரைக் கடவுளுக்குப் பலி கொடுப்போம்' என உறுதி கூறினுர்கள். திறம்பட அணிவகுத்துக்கொண்டு மூவாயிரம் முதல் தரமான குதிரை வீரர்கள், தன்னைச் சூழவும், வேறு மூவாயிரம் குதிரை வீரர்கள் பின் அணியில் வரவும், தக்க படை வீரர்கள் இரு பக்கங்களிலும் காத்துவரவும், முதல் வரிசையில் வைக்கக்கூடிய முந்நூறு குதிரை வீரர்கள் முன்னணியாகச் செல்லவும், கியாஸ் உடீன் கொப்பத்தை நோக்கிப் புறப்பட்டான். போர் சமாதானப் பேச்சுக்களால் நிறுத்தப்பட்டிருந்தபடியால் போசலர் படை சிறிது அயர்ந்து இருந்தது. அயர்ந்த சமயம் பார்த்து மதுரைப் படை போசலரைத் தாக்கியது. போசலருக்குப் போர் நினைவு இல்லாதபடியால் ஏதோ திருடர்கள் வந்திருக்கிருர்கள் என எளிதாக எண்ணி, நாலாபக்கமும் ஓடிப் பிடிக்கத் தொடங்கினர். இவ்வாறு போசலர் படை கட்டுவிடவே, மதுரையார் எளிதில் வென்றி கொண்டனர்.

(தொடரும்)

கையறவு.

சங்கப் பேரன்பரும், கொடை வள்ளலும், பெருவணிகரும், பிரஞ்சு அரசாங்கத்தாரிடம் பல பெரும் பட்டங்கள் பெற்றவரும் நம் சங்கத்திற்குப் பெரும் பொருள் அளித்தும் திரட்டியும் உதவிய வருமான கூத்தாநல்லூர் ஜ. ம. அப்துல் அஜிஸ் அவர்கள் 1958 பிப்பிரவரி 18-ஆம் நாளன்று (இந்தோ சீனம்) வியத்துநாம் தலைநகரான சைகோனில் இவ்வுலக வாழ்வை நீத்தமை அறிந்து பெரிதும் வருந்துகின்ருேம். அவர்களது குடும்பத்தாருக்கும் உறவினர்க்கும் எங்கள் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

பொழிற்ருெண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

(பதிப்புரிமை ஆசிரியருக்கு)

K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

முத்தின் வளத்தைக் கொழிக்கும்,

'பேருலகத்து மேஎந் தோன்றிச்
சீருடை விழுச் சிவப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங் குவளை இருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற் கொற்கை'

என்ற கவிதையின்கண் கொற்கை முத்தின் ஒளிநலமும் செல்வச் சிறப்பும் புலனும். நன் முத்துகளைக் கிளிஞ்சலிலிட்டுப், பழங் காலத்துத் தமிழ்மக்கள் தம் இளஞ்சிறார்க்குக், கிலுகிலுப்பை செய்து விளையாடும் வகையினைக் கிளக்கும்,

நறவா யுறைக்கு நாகு நணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகை யொடுவந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கை'

என்ற சிறுபாணாற்றுப்படை அடிகளான் அக்காலத்தில் அளவில் அதிகமாய்க் கிடைக்கும் முத்தின் சீரும் சிறப்பும் ஒருவாறுணரப் படும். மற்றும் சிறுகுடிக் கிளையுடன் மகிழும் மள்ளர்கள் செந் நெற்கதிர் அறுத்த வகைக்குத் தெள் முத்தினைக் கூலியாகக் கொண்டு, தம் குடிலில் கொண்டு குவிக்க, அச் சங்கினங்களின் பருமுத்தை ஓதிமம் தன் முட்டையெனக் கருதி வாரிக் குவிக்கு மென்க் கீழ்வரும் பாட்டின்கண் குறித்திருப்பதினுன், பழந்தமிழ் நாட்டின் இணையற்ற இயற்கை நீர் நில வளத்தின் வழி நல் முத்துகள் செழித்துக் கிடத்தல் தெற்றெனத் தெளியப்படும்.

'மூரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து

முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்
சேரிக் கருங்கை மள்ளர்குயந்
திட்டி யரிந்த கொத்தினுக்குத்
தெண்முத் தளப்பச் சிறுகுடிலிற்
சேரக் கொடுபோ யவர்குவிப்ப
வேரிக் குவளைக் குழியில்வரி
வெண்சங் கினங்க ளீற்றுளைந்து
மேட்டி லுகுத்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென
வாரிக் குவிக்கும் ... ..."

இச்சொல்லோவியத்தின்கண் தமிழகத்தே பண்டு நிலவிய முத்தின் அழகுணர்ச்சியும், தாளாண்மையாற் செய்களில் ஏராளமாய் விளைத்து விளங்கும் வேளாண்மையின் அறவலிமைச் சிறப்பும் ஈண்டே நினைவுகூர்ந்து மகிழ்தல் வேண்டும்.

தமிழகத்துச் செம்மைசான்ற முத்தின் நலத்தைமுன்னியே சோனகர், யவனர் முதலானோர் திரைகடல் கடந்து தமிழ் நாட்டு முத்துகளைத் தங்கள் நாட்டுப்பெண்களுக்கு, காது, கழுத்து, மூக்குக்குரிய அணிகலனுகக்கொண்டு சென்றனர். மற்றும் தமிழகத்துத் தென்னுட்டு முத்துகள் அவர்தம் மன்னர்களின் திருமுடிகளின்மீது அழகுற இலங்குவனவாயின. நீலத்திரை தந்த நித்திலமே சிறந்ததென அஞ்ஞான்றை அறிஞர் கூறுட'

திரைவாய்ப் பெருங்கடன் முத்தங்
குவிப்ப முகந்து கொண்டு
நுரைவாய் நுளைச்சிய ரோடிக்
கழுமலத் துள்ள மூழ்கும்
விரைவாய் நறுமலர் சூடிய
விண்ண வன்றன் னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு
நந்தமை யாள் வனவே

என்ற திருக்கழுமலத்துத் தேவாரத் திருவிருத்தமும்

புதிய பூவினைப் புண்ணிய நாதனை
நிதியை நீதியை நித்திலக் குன்றினைக்
கதியைக் கண்டங் கறுத்த கடவுளை
மதியை மைந்தனை நான்மறக் கிற்பனே

என்ற திருக்குறுந்தொகையும், நன் முத்தினியல்பை இறைவனின் இயல் நலச் சீரோடியைபுற ஒப்புமை செய்துவைத்துச் சிறப்பிக்கும் சீரிய மொழிகள். மற்றும் அவை சிந்தையைக் களிப்பிக்கும் தன்மையன. நாவுக்கரசு இறைவனது திரு

மேனியை முத்துக்களிற் சிறந்த நித்திலத்திலே கண்ணாரக்கண்டு கடவுட்டன்மையைப் பாடிய

'உருத்திரனை யுமாபதியை யுலகானானை
யுத்தமனை நித்திலத்தை யொருவன்றன்னை
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பினானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்துநின்ற
நெருப்பதனை நித்திலத்தின் றொத்தொப்பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே'

என்ற திருத்தாண்டகம் நித்திலத்தின் விழுமிய விருப்பு நிலையினைப் புலப்படுத்தும். மணிவாசகரும் தந்தெய்வத் தமிழ் மாமறையில் இறைவனை, 'அருமாமணி முத்தே' என ஓதிச் சிறப்பித்தருளுவாராயினர்.

முத்து மூவகைத்தென்பது

"சந்திர குருவே யங்கா ரகனென
வந்தநீர் மைய வட்டத் தொகுதி"

என்ற சிலப்பதிகார வரிகளான் தெளியப்படும். அவை திங்களைப் போன்ற வெண்முத்து, வியாழத்தைப் போன்ற பொன்னிற முத்து, அங்காரகனைப்போன்ற செந்நிற முத்து என்பனவாம். 'வட்டத் தொகுதி' யென்பதை ஆணி முத்தெனக்கொண்டு, முத்தின் வகையினை, வெண் முத்து, செந்நீர் முத்து. ஆணி முத்தெனவும் வகுப்பர் அரும்பதவுரையாசிரியர். முத்து வகையில் மிக்க குணமுடையன திங்களைப்போன்ற வெண்ணிற முத்தும், அங்காரகனைப்போன்ற செந்நிற முத்துமே. இவை மலமாசற்ற வட்டவுருட்சியும் கிரட்சியுமுடையனவாய் விளங்கும். இவை முறையே ஆற்றலையும் அறிவினையும் இயக்கும் வாய்ப்பினை இயல்பாய்ப் பெற்றதனான், அணிபவரைப் போற்றிக் காக்கும் பெற்றிமை அவைகளுக்குண்டு. மற்றும் இத்தகைய குணித்த முத்துகளை அணியும் நல்லோர் ஒள்ளிய நற்செல்வம் வாய்ந்து, மக்களிடையே தெய்வ அருளொளி சுடர்ந்து விளங்குவோராகக் கருதப்படுவார்.

முத்துகளின் குற்றங்கள் ஈரைந்தென்பது,

'தங்கிய முள்ளே று மூகங்கறுத்தல் செந்நீர்
சார்வன மண்ணேறிடப் புத்திருகல் கோணை
மங்குறு சிப்பிப் பற்றுக்காக வன்னி
மருண்டி ருத்தல் குறை பத்தே'

என்ற வரிகளானறிக. இவற்றுள் பெரிதும் கடியப்படுவனவாகிய குற்றங்கள் நான்கே. அவை காற்றேறு, மணலேறு, கல்லேறு,

நீர் நிலை என்பனவாம். இதனை 'காற்றினும், மண்ணினும், கல்லினும், நீரினும் தோற்றிய குற்றம்' எனச் சிலப்பதிகாரத்தின்கண் வாராநின்ற குறிப்பினானுமறிக.

அருட் புலமை வாய்ந்த பரஞ்சோதி முனிவர் முத்தின் பிறப்பிடம் நிலமும் நீருமெனக்கொண்டு மூங்கில், பாம்பின் தலை, பன்றிக் கொம்பு, கரும்பு, யானைக்கொம்பு, நெற்பயிர், சிங்கத்தின் கை, கொக்கின் கழுத்து என்பனவற்றில் தோன்றுவன யாவும் நிலத்து முத்தின் வகை என்பர். அவரது கருத்தின்படி, சங்கு, மேகம், சிப்பி, மீனின்தலை, ஆகிய இடங்களில் தோன்றும் முத்து, சலசமாம். இவர் விளக்கும் முத்தின் வகைகளும், நிறங்களும், குற்றங்களும் நுனித்துணரின் தமிழ் நாட்டவர் முத்துகளின் சிறப்பியல்புகளையும் பயனையும் கருதி எவ்வண்ணம் கண்ணுங் கருத்துங்கொண்டு பண்டு மதித்தோம்பி அவைகளைச் செல்வப் பொருளாக வந்த உண்மைப் பெரு வழக்கம் தெற்றென விளங்கா நிற்கும்

'தக்கமுத் திரண்டு வேறு தலசமே சலசமென்ன
இக்கதிர் முத்தந் தோன்று மிடன்பதின் மூன்றுசங்கம்
மைக்கரு முகில்வேய் பாம்பின் மத்தகம் பன்றிகோடு
மிக்கவெண் சாலி யிப்பி மீன்றலை வேழக்கன்னல்

'கரிமருப் பைவாய் மான்கை கற்புடை மடவார்கண்டம்
இருசிறைக் கொக்கின் கண்ட மெனக்கடை கிடந்தமூன்றும்
அரியன வாதிப் பத்து நிறங்களு மணங்குந் தங்கட்
குரியன நிறுத்த வாறே யெனவு முறைப்பக் கேண்மின்

'மாடவெண் புறவின் முட்டை வடிவெனத்
திரண்டபேழ்வாய்
கோடுகான் முத்தம் வெள்ளை நிறத்தன, கொண்மூ முத்தம்
நீடுசெம் பரிதியன்ன நிறுத்தது கிளைமுத்தாலிப்
பீடுசா னிறத்த ராவின் பெருமுத்த நீலத்தாமால்

'ஏனமா வாரஞ் சோரி யீர்ஞ்சுவைச் சாலிமுத்தம்
ஆனது பசுமைத் தாகும் பாதிரி யனைய தாகும்
மீனது தாளம் வேழ மிரண்டினும் வளையுமுத்தந்
தானது பொன்னின் சோதி தெய்வதஞ் சாற்றக் கேண்மின்

'பான்முத்தம் வருணன்முத்தம் பகன்முத்தம்
பகலோன் முத்தம்
மான்முத்த நீலமுத்த மாசறு குருதிமுத்தங்
கான்முத்தம் பசியமுத்தங் காலன்றன் முத்தந்தேவர்
கோன்முத்தம் பொன்போன் முத்தங் குணங்களும்
பயனுஞ்சொல்வாம்

'உடுத்திர ளனைய காட்சி யுருட்சிமா சின்மை கையால்
எடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் புடிதமென்ன
அடுத்திடு குணமா றின்ன வணியின்மூ தணங்கோ டின்மை
விடுத்திடுந் திருவந் தெய்தும் விளைந்திடுஞ் செல்வம்
வாழ்நாள்'

என்ற பரஞ்சோதியாரது அறுவகைப் பாக்கள் முத்தின் சிறப்பினைத் துணிதற்குச் சாலும்.

தமிழகத்தே சிறப்பாகக் காண்டற்கண் மகிழ்ச்சி விளைக்கும் முத்துகள், கடல் முத்து, கொண்டல்முத்து, கயல்முத்து, புயல் முத்து, செந்நெல் முத்து, வேய்முத்து, வலம்புரி முத்து, கழை முத்து, பங்கய மடல் முத்து, சிந்துர மருப்பு முத்து என்ற பல வகையின. குற்றமற்ற இத்தகைய முத்துகளை மனனும் புலனும் மாட்சிமையுற வேண்டி, இயற்கையழகு மாறுருவாறெடுத்துப் பல வடிவுகளில் தமிழ் மக்கள் மாலை தொடுத்தணிந்துகொள்வதில் பெரிதும் நாட்டமுடையவராயிருந்தனர். பிறவி மாட்சிமைக்குக் குற்றமுடைய முத்துகள் ஏற்புடைத்தன்று. பெரும்பாலும் சரவையென்ற குற்றம் சிந்துர மருப்பு முத்திலும், காடென்ற குற்றம் வலம்புரி சங்க முத்திலும், கழை முத்திலும் காணப்படுமென்றும், புயல் முத்திலும் பங்கய முத்திலும் முறையே கருகலும், திருகலுமுளதென்றும் முத்து வகைகளின் உயிர்ப்பியல்பறிந்த நந்தமிழ்ச் சான்றோர் சாற்றுவார். இவ்வுண்மை,

'கடுநடைச்சிந் துர மருப்பின்
கதிர்கொண் முத்துஞ் சர வைநீள்
கடலளிக்கும் பணிலமுத்துங்
கழையின் முத்துங் காடுவா
னுடுமுகட்டம் புயல்கருக்கொண்
டுமிழு முத்தங் கருகரே
ஞெழுகுபொற்பங் கய மடற்றந்
தொளிரு முத்தந் திருகல்காண்'

என்ற ஆற்றல் சான்ற செவ்விய நூற்பாவில் விளங்குகிறதென்க. மற்றும், ஏனைய பல்வகை முத்துகளில் அமைகின்ற பலவாய குற்றங்கள்,

இறுகல்,கரு குதல்,முரி வி(இ)லட்சுமிபு டாய(ம்)முள்
ளேறல்,புகை யேறல்,செம்ம
ணேறல்,வெச் சந்திருகன், மத்தகக் குழிவன்றி
யிரவியொளி யிற்கரத்தன்,
மறுவதுத கட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தளைகவிர்ப்பு,

துணர் ௩௩. மலர் அ. பக். 256-ன் தொடர்ச்சி.

தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டு வரலாறு.

வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார்,
ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

(b) நட்டுவஞ் செய்ய நட்டுவர் அறுவர், நாடகம் நடிக்க நால்வர், கானபாடிகள் மூவர், வங்கியம் வாசிப்பார் மூவர், பாடவியம் வாசிப்பார் நால்வர், உடுக்கை வாசிப்பார் இருவர், வீணை வாசிப்பார் இருவர், ஆரியம் பாடுவார் மூவர், தமிழ்பாட நால்வர், கொட்டி மத்தளம் அடிக்க இருவர், முத்திரைச் சங்கு ஊத இருவர், பக்க வாத்தியர் ஐவர், காந்தர்வர் ஐவர், தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகஞ்செய்ய இருவர், கணக்கு எழுத நால்வரும் அவர்களுக்குக் கீழ் கணக்கு எழுத எண்மரும் ஆகப் பன்னிருவர், திருவாய்க் கேள்விகள் இருவர், உவச்சர் பதினெருவர், சகடைக் கொட்டிகள் ஐம்பத்தைவர், திருப்பள்ளித் தொங்கல்பிடிப்பார் பதினெருவர், விளக்குடையார்கள் எண்மர், நீர்த்தெளியான் நால்வர், சன்னுலியள் இருவர், திருமடைப்பள்ளிக்குக் குசவர் பதினெருவர், வண்ணத்தார்கள் இருவர், காவிதிமை செய்வார் இருவர், நாவிசஞ் செய்வார் இருவர், திரு இருவரும் அவர்களுக்குக் கீழ்ஆள் இருவர், இருவர் ஆக நால்வரும் ஆக அறுவர், கோலினமை செய்வார் இருவர், அம்பட்டன் ஒருவன், தய்யான் ஒருவன், இரத்தினத் தய்யான் ஒருவன் (Jewel stitcher), கன்னுன் ஒருவன், தச்சாசாரியார் (master carpenter) மூவர், தச்சு (carpenter) இருவர், பாணர் மூவர், கண்காணித் தட்டாண்மை செய்வார் ஒருவர் என்னும் இவர்களை முதலாம் இராசராச சோழன், தஞ்சை இராசராசேச்சரத்துக்கு நியமித்திருந்தான்.

இவர்களுள் நட்டுவர் என்பார் நாட்டியம் பழக்கி ஆட்டுவிப்பவர். கானபாடிகள் என்பார் இசைப்பாட்டு பாடுபவர். காந்தர்வர் என்பார் பாடுபவர், திருவாய்க் கேள்விகள் என்பார் அரசன்

[345ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாந்தளிர், முயற்குருதி, செவ்வரத் த(ம்)ங,கோப
மருவுமணி வகையளிப்பேர்,
மூறுகல்,வளி யேடல்,கல் லேறல்,சிப் பிப்பத்து,
முரிதறிரு குதல்,சிவப்பு,
முருந்திற் குருத்துச் செருந்துருவி இடையாடி
மூரிகுதை, வடிவொதுங்கல்,
துறுமுகம், கக்க(ல்)லொளி மடகல்,கர டென்பதாம்.

என்றெரு பழம்பாவினிலே குறிக்கப்படுதல் ஈண்டு நினைவு கூரத் தகும்.

திருவாய் மலர்ந்தருளியவற்றைக் கேட்டுவந்து உணர்த்துபவர். உவச்சர் என்பார் சங்கு, காளம் இவைகளை ஊதுபவர். (உவச்சர் = "பூசாரிச் சாதியார், கோயில் மேளம் அடிப்பவர்" எனச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட Tamil Lexicon என்னும் அகராதியில் குறித்திருப்பது பொருந்துவதாய் இல்லை, என்னை? திருத்துருத்திக் கல்வெட்டுத் தொடர் "சங்கு, காளம் ஊதும் உவச்சர்க்குப் பங்கு ஒன்று" என்று குறிக்கின்றமையின்.) சகடைக் கொட்டிகள் என்பார் பெரிய மேளம் அடிப்பவர். திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பார் என்பவர் கோயில் மூர்த்திகட்குச் சாத்தப் படும் மாலை பிடிப்பவர். விளக்குடையார் என்பவர் விளக்கு ஏற்று பவர் (lamp lighters). நீர்த்தெளியான் என்பவர் நீர்த்தெளிப்பவர். வண்ணத்தார் என்பவர் வண்ணார். இவர்களுக்கு ஈரங்கொல்லிகள் என்ற வேறு பெயரும் உண்டு. இச்செய்தி "வண்ணத்தார்கள் இருவர்க்குப் பேரால் பங்கு ஒன்றாக இத்தெருவில் ஈரங்கொள்ளி களுக்குப் பங்கு இரண்டும்" என்னும் கல்வெட்டுத்தொடர் சான்று பகரும். இங்கே கொள்ளிகள் என்பது கொல்லிகள் என்றிருக்க வேண்டும். காவிதிமை செய்வார் என்பவர் கணக்குவேலை செய்பவர் (One who performs the duty of accountant.)

திரு என்பவர் சோதிடர். இச்செய்தி "திரு ஒருவனுக்கும் கீழாள் இரண்டுக்கும் துணையன் ஆதித்தனை செம்பியன் கொற்றப் பெருங்கணிக்குப் பங்கு இரண்டும், மேற்படி ஒருவனுக்கும் கீழாள் இரண்டுக்கும் பராந்தகன் பாண்டி குலாசனி ஆன ராஜராஜ ஹணிதாதி ராஜனுக்குப் பங்கு இரண்டும்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாகும். இத்தொடர்களில் வந்துள்ள கணி என் னும் சொல் சோதிடன் என்னும் பொருளில் உள்ளது. "வினை வெல்லாம் கண்ணியுரைப்பான் கணி" என்பது புறப்பொருள் வெண்பாமாலை. எனவே திரு என்ற சொல் பதினொன்றும் நூற் றுண்டின் தொடக்கத்தில் சோதிடர் என்ற பொருளில் வழங்கி வந் துள்ளமை அறியப்படும். இக்காலம் இச்சொல் இப்பொருளில் வழக்கில் இல்லை. தய்யான் என்பவன் தையற்காரன். பாணர் என்பவர் பாடல்வல்ல சாதியார். கல்வெட்டுத்துறையாளர் 'தையல் காரன்' என்பர். அப்பொருள் உண்டெனினும் இங்கு அது பொருந்துவதாய் இல்லை. முன்னரே தையற்காரரைக் குறிப்பிட்டு விட்டபடியாலும், பாணரில் ஒருவர் பெயர் குறிக்கவந்தவிடத்து "பாணன் உத்தமன் சூற்றியான அரிகுலகேசரிச் சாக்கைக்குப் பங்கு ஒன்றரை" என்பதில் 'சாக்கைக்கு' என்றிருப்பதாலும், பாட லுடன் கூத்து நிகழ்த்துபவரை உணர்த்துவதாகும். வங்கியம் வாசிப்பார் என்பவர் ஒருவகைக் குழல் வாசிப்பவர். சன்னுலியள்— சன்னை என்னும் ஒருவகைப் பெருமுரசு வாசிப்பவரா (அ) வேறு என்பது புலப்படவில்லை. கோலின்மை செய்வார் என்பதற்கு இக் காலம் பொருள் விளங்கவில்லை.

மேற்குறித்த இவர்களுக்கு நிவந்தமாகப் பங்கு செய்தபடி, பங்குவழி பங்கு ஒன்றினால், நிலம் வேலியினால் இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால், நெல் நூற்றுக் கலமாகக் கொடுக்கப்பெற்று வந்தது. மேற்குறித்தவர்களில் இன்னார்க்கு இவ்வளவு பங்கு என்பதை விரிவஞ்சி இங்குக் குறித்திலேன் எனினும் சகடைக்கொட்டிகளுக்கு உட்படும் ஆட்கள் நாற்பத்தைந்து பேர்களுக்குத் தலைக்கு அரைப்பங்குடன் **பாதவக்காணியம்** கொடுக்கப்பெற்றுவந்தது. இங்கே பாதவக்காணி என்பதற்கு (allowance) என்று பொருள்.

பண்டாரி, பரிசாரகர், கரணத்தார் இவர்களை நியமித்தது.

முதலாம் இராசராசசோழன், இராசராசேச்சரம் உடையார்க்குப் பண்டாரஞ்செய்ய பிராமணரையும், திருப்பரிசாரகஞ்செய்ய மாணிகளையும், கணக்கெழுதக் கரணத்தார்களையும் சோழ மண்டலத்துப் பிர்மதேயங்கள், பாண்டி நாடான ராஜராஜ மண்டலத்துப் பிர்மதேயங்கள், தொண்டை நாடான சயங்கொண்ட சோழமண்டலத்துப் பிர்மதேயங்கள் இவைகளிலிருந்து இடுமாறு பணித்திருந்தான்.

இவர்களில் பூமிசம்பத்தும், அர்த்த சம்பத்தும், பந்து சம்பத்தும் உடையராய் இருந்தவர்களே பண்டாரிகளாக (as temple treasurers) நியமிக்கப்பெற்றிருந்தனர். இங்ஙனம் பண்டாரிகளாக நியமிக்கப்பெற்றிருந்தவர் பிராமணரேயாவர். முதலாம் இராசராச சோழன் கட்டளைப்படி இவர்களை இட்டவர், அருமொழிதேவ வளநாட்டு, மங்கல நாட்டு, மங்கலத்துச் சபையாரும், இராசேந்திரசிங்க வளநாட்டு வீரநாராயண சதுர்வேதிமங்கலத்துச் சபையாரும், கேரளாந்தக வளநாட்டு உறையூர்க்கூற்றத்து ராஜாசரிய சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், நித்த விநோத வளநாட்டு இராசகேசரி சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும் ஆவர்.

இச்சபையார் தங்கள் தங்கள் ஊர்களிலிருந்து ஒவ்வொருவராக நால்வரை அனுப்பியிருந்தனர். எனவே தஞ்சை இராசராசேச்சரத்தில் பண்டாரிகளாக வேலைபார்த்துவந்தவர் நால்வர் ஆவர். பண்டாரி ஒருவர்க்குச் சம்பளம் ஓராண்டுக்கு நெல் கலம் இவ்வளவு என்பது கல்வெட்டில் சிதைந்துபோய்விட்டது. இவர்கள் தங்கள் சம்பளத்தை ஸ்ரீ ராஜராஜேஸ்வரம் உடையார் நாட்டுப் பண்டாரத்தில் (Country Treasury) பெற்றுவந்தனர்.

இங்கு ஒரு குறிப்பு:— அறிவுத்திறனும், பூமி சம்பத்தும், அர்த்த சம்பத்தும், பந்து சம்பத்தும் உடையவர்களே, பண்டைக் காலத்தில் பண்டாரிகளாக நியமிக்கப்பெற்றுவந்த செய்தி ஈண்டு நினைவில் வைக்கத் தக்கதொன்றாம்.

[தொடரும்]

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு.]

நிறுத்த முறையானே சொல்லுணர்த்திய எடுத்துக் கொண்டாரதனாலிவ்வதிகாரம் சொல்லதிகாரமென்னும் பெயர்த்தாயிற்று" என்பது 'சொல்லதிகாரம்' என ஏனிப் பகுதிக்குப்பெயரிட்டனர் என எழும் வினாவிற்கு விடையளிக்கின்றது.

நிறுத்த முறையானே = பாயிரத்து ணிறுத்திய முறைப்படி. முறை = வரிசை. 'ஆன்' என்பது ஈண்டு 'படி' என்னும் பொருளில் நிலைபெறுகின்றது என்க. சொல் உணர்த்திய = சொல்லை யுணர்த்துவதற்கு. எடுத்துக்கொண்டார் = உட்கொண்டார்; மேற் கொண்டார். (இப்பகுதியில் சொற்களை, நேரே எடுத்தோதியும் இயல் கூறியும் விளக்குஞ் செயலைக்கருதினார், அல்லது துணிந்தார் என்பதாம்.) எடுத்துக்கொள்ளுதலென்பதீண் டுட்கொள்ளுதலின் மேனின்றது. பலவற்றுளொன்றைக்கொள்ளுதலை எடுத்துக் கொள்ளுதலென்பது மரபாதலின் எழுத்துச் சொல் பொருள் என்னு மூன்றனுள் சொல்லையுணர்த்த உட்கொண்டன ரென்பதாம்.

பாயிரத்து ணிறுத்திய முறைப்படி சொல்லை யுணர்த்துவதற்கு எடுத்துக்கொண்டாரதனால் இவ்வதிகாரம் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று என்பது, ஒருவன பிறனொருவன் ஒழுகலாற்றை யெடுத்துரைப்பக் கேட்டவன் இவன் கூறியபடியே அவன் ஒழுகினான் அதனால் அவற் கந்நிலை நேர்ந்தது, என்பது போல நின்றது.

பாயிரத்துள் நிறுத்திய முறை கண்டு தொல்காப்பியர் சொல லத் தொடங்கினா ரில்லை. பாயிரத்து ணிறுத்திய முறையும் தொல் காப்பியர் நிறுத்திய முறையும் வேறில்லை யென்பதாம். முதலிற் படிக்கப்படுவது பாயிர மாதலால் பாயிரத்துட் படிக்கப்பட்டபடியே எழுத்தை யுணர்த்திப் பின் சொல்லை யுணர்த்த எடுத்துக்கொண்டா ரென்றால் நன்கு விளங்குமென்பது கருதி யவ்வாறு கூறினாரென்க.

இனி இறையனார் களவிய லுரையாசிரியர், 'எல்லை' என் பது இந்நூல் இன்ன எல்லையு ணடக்குமென்பது. இந்நூல் என்ன எல்லையு ணடக்குமோ எனின்:— வடக்கு வேங்கடம், தெற்குக் கன்னியாகுமரி, கிழக்கு மேற்குங் கட லெல்லையாக நடக்கு மென்பது

"வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த"

நூலதன் முறையே வாலிதின் விரிப்பின்' எனவும்,

---

* நிறுத்த முறையானே என்பதற்கு நச்சினார்க்கினியரும், 'எழுத்துஞ்சொல்லும் பொருளு நாடி' எனப்பாயிரத்து ணிறுத்தமுறையானே என எழுதுதலையுங் காண்க.

" வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து" எனவும் காக்கை பாடினி யாருந் *தொல்காப்பியனாருஞ் சொல்லினா ராகலின் என்பது".

எனத் தொல்காப்பியத்துண் முகவுரையாகத் திகழும் "வட வேங்கடந் தென்குமரி" எனத் தொடங்கும் பாயிரப் பா, தொல்காப் பியராலேயே செய்யப்பட்டதெனக் கருதிக் கூறினர்; அவர் கூறிய படி அப்பாயிரப்பாத் தொல்காப்பியராற் செய்யப்பட்டதென நிலை பெறின், இங்கு 'நிறுத்தமுறையானே" என்பதற்கு அவர் பாயி ரத்து ணிறுத்திய முறைக்கு மாறாகாமல் என விளக்கங் கூறலாம். "வடவேங்கடந் தென்குமரி" என்னும் பாயிரப்பா, பனம்பாரனார் என்பவராற் செய்யப்பட்டதென்பதே பெரும்பாலோர் கொண்ட முடிபாகும்.

"சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமை யுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது" என்பது "சொல் லதிகாரம்" என்னுந் தொடருள் சொல்லாவது யாது என்னும் வினாவிற்கு விடையாகின்றது.

இளம்பூரணர் "சொல்லாவது, எழுத்தொடு புணர்ந்து பொருளறிவுறுக்கு மோசை" என எழுதியதை மேற்கொண்ட மையால் அவ்வுரைக் கருத்தும் விளங்க இங்ஙன மெழுதுவாராயினர்.

எழுத்தா னமைந்து பொருளறிவுறுக்குந் தன்மை, சொல்லிற் குண்மையால், அது எழுத்தின் வேறுபடினும் எழுத்தொலியுந் தோன்ற நிற்றலின் அதனை "எழுத்தோ டொருபுடையா னொற் றுமையுடைத்தாய்" என்றனர்.

எள், உண்டையாகாதவழி வடிவு முதலிய தன்றன்மை தோன்ற நிற்பதுபோல, உண்டையானபொழுதும் வடிவு முதலிய தன்மைகள் தோன்றவே நிற்கும். அதுபோல எழுத்து, சொல்லாக அமையாத நிலைமைக்கண்போலவே சொல்லாக அமைந்த நிலைக்கண்ணும் வடிவு முதலிய தன்றன்மை தோன்ற நிற்றலின் சொல், எழுத்தோ டொருபுடையான் ஒற்றுமையுடைத்தாயிற்றென்க.

நன்னூலில் "மொழியாய்த்தொடரினு முன்னனைத் தெழுத்தே", 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்', என்னு நூற் பாக்களில், 'எழுத்து', சுண்ணத்தின்கண் ணரிசனமுதலிய போலாது மாலையின்கண் மலர்போல அவற்றின்கணிற்றலின் 'முன்னனைத்து' எனவும், எழுத்தானய மொழி, மலராற் சமைத்த மாலைபோல நிற்றலின் "எழுத்தே யென்றும்" எனவும் எழுதி யிருத்தலை நோக்கித் தெளிக. (தொடரும்)

* 'தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரங்கூறிய பனம்பாரனாரும்' என்ற பாடமும் உளது.

(1) பழமொழித் திரட்டு 0—14—0, (2) அன்புமலர் மாலை 0—12—0, (3) தமிழ் மலர் 0—8—0, (4) அணி நாற்பது 0—4—0, (5) இன்றெகை 0—4—0, (6) உரிமைச் செல்வம் 0—8—0, (7) யோக சூத்திரம் 0—8—0. இந்நூல்களின் ஆசிரியர் பண்டித, இராம. சுப்பிரமணிய நாவலர் கிடைக்குமிடம்:— செந்தமிழ் நிலையம், தக்கலை, தென் திருவாங்கூர்

(1) தமிழகத்தின் பல பகுதிகளிலும், பிற இடங்களிலும் வழங்கிய பலவேறு பொருள்களைப்பற்றிய கருத்து நிறைந்த பழமொழித் தொகுப்பு.

(2) உலகம் இறைநெறியிற் சென்றின்புறுவான் வேண்டி உளங் கனிந்தெழுந்த உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் தெள்ளிய தீந் தமிழ் நடையில் சுவைபடப் பாடப்பெற்றதொரு சிறுநூல்.

(3) இறைநிலை—ஊழ்—அன்பு முதலிய பல்வேறு பண்புகளை மக்கள் அறிந்து தெரிந்தொழுகுமுகத்தான் ஆக்கிய பாடற்றெகுதிகளுடன் இயற்கைப் புனைவுகளையும் தன்னகத்தே கொண்டு மிளிரும் நூல்.

(4) யார்யார்க்கு எவ்வெப்பொருள்கள் அணிசெய்யும் என்பதனை வெண்பா யாப்பில் நிறைபடக் கோத்துச் செய்ததொரு அழகிய நூல்.

(5) அறம்—பொருள்—இன்பம் பற்றிய செறிந்த கருத்துக்களை ஆத்திசூடிப் பாக்களைப்போலச் சுருக்கிக் கூறும் நூல்.

(6) உலக நடைமுறை, மக்கள்ஒழுகவேண்டிய நெறி ஆய குறிக்கோள்களைப் பல துறைகளின் வாயிலாக வற்புறுத்தும் நூல்.

(7) வடமொழியிற் பதஞ்சலி முனிவர் செய்த நூலின் தமிழாக்கம். பொதுவாக யோகநெறிபற்றிய கருத்துக்களைச் சூத்திர யாப்பால் செய்து உரையுடன் வெளியிட்டிருக்கிறுர் இவ்வாசிரியர்.

மேற்கண்ட ஏழு நூல்களும் பொதுவாக எல்லோரும் படித்துப் பயன்பெறத்தக்கவை. சிறப்பாகத் தமிழ் மாணவர்கட்கும் நூல் நிலையங்கட்கும் பயன்படும்.

(1) விநாயகர் மாண்பு 0—5—0, (2) திருநெல்வாயிலரத்துறை தலவரலாறு 0—5—0. ஆசிரியர் வித்துவான் க. முருகேச முதலியார்.

1. விநாயகரைப்பற்றிய புராண, தத்துவக் கருத்துக்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறும் உரைநடை நூல். [வெளியிட்டோர் அரியலூர் மணிவாசக மன்றத்தார்.]

2. இந்நூல் இத்தல மாண்புபற்றி இரா. அரங்கசாமி ஐயங்காரவர்கள் செய்யுள் வடிவில் எழுதிய நூலை யாவரும் படித்துப் பயன்பெறும் பொருட்டு இவ்வாசிரியரால் எளிய தமிழ் நடையில் செய்யப்பெற்றது. (வெளியிட்டோர் வெள்ளூர் என வழங்கும் வேலூர் கா. வெ. இராமசாமி ஐயங்கார் அவர்கள்.)

(1) **வேலாயுத சதகம், (2) திறப்புகழ்.** ஆசிரியர்: அருட் கவி அழகுமுத்துப் புலவர்; மறைமலையடிகளின் தமிழன்பின் நினைவுக் காணிக்கையாக இலவசமாக வெளியிட்டோர் நா. வீரப்பச்செட் டியார் & பிரதர், நாகப்பட்டினம்.

1. திருவருட் பாங்கையும் செந்தமிழ்த் திறனையும் மேலாக உணர்த்தும் வேலாயுத சதகம் பத்திச் சுவை சொட்டும் 100 பாடல் களைக் கொண்டது.

பூவாகியுன் னடிசார்ந்திலேன் பொடியாகியுன் மெய்தீண்டிலேன்
பாவாகியுன் பேர்தாங்கிலேன் பணியாகியுன் புயமாகிலேன்
தேவாகியுன் படையாகிலேன் சேயாவடி யேனுய்வனோ
மேவாதசூ ரனைவென்றவா வேலாயுதா வேலாயுதா

என்பனபோன்ற கனிவுள்ள பாக்கள் உள்ளத்தைத்தொடும் பான்மையன.

2. முருகப் பெருமானின் அருட்டிறனையும் அழகுநலனையும் அவனையடையுமாறும் அடையாக்குறையும் தடையாம் பொருளும் பற்றி

இருகையே கூப்பவிழி
யிணைகளே நோக்கவுன
திசைகளே கேட்கவிரு செவிவாயுன்

னியல்புபா ராட்டு தமிழ்
அதனையே வாழ்த்த மகிழ்
இதயமே தீர்க்கமுடன் நினைவாக

வருமையா நீற்றை நுதல்
இலகவே சாத்தியபின்
அறுமுகா போற்றியென முடிதாழ

அழகுசேர் கார்த்திகையின்
விரதமே நோற்க மயில்
அதனிலே காட்சிதர வரவேணும்

என்பதுபோன்ற செவிக்கினிய வண்ணங்கள் அமையப் பாடப்பெற்ற நூல். ஒவ்வொரு பாடலும் நமக்கு அருணகிரியாரையே நினைப் பூட்டுகின்றது. இவ்விரு நூல்களையும் மும்மொழியறிஞராய்த் தனித் தமிழ் வளர்த்த மறைமலையடிகளார் நினைவாக நல்ல தாளில் அழகுற அச்சிட்டு விலையின்றி வழங்குதலைப் பாராட்டி, யாவரும் பெற்றுப் பயனடைய வேண்டுகின்றோம்.

கைத்தறி: எட்டாம் ஆண்டுத் தீபாவளி மலர், விலை ரூ. 1/- நல்ல பல கட்டுரைகளைத்தாங்கிக் கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றங் கருதி வெளிவரும் இவ்விதழின் இத் தீபாவளி மலர் பல துறையிலும் சிறந்த அறிஞர்களின் எழுத்தோவியங்களைத் தாங்கி மிளிர்கின்றது.